ரம்பேவ பிரதேச சபை
அநுராதபுர மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந்திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஆகஸ்ட் மாதம் 25 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்டம்பர் மாதம் 14 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ரம்பேவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 2,436,000 பெறுமதியான முத்திரைக் கட்டண நிலுவை வருமானம் நிதிக்கூற்றுகளில் ரூபா 2,486,300 பெறுமதியான தொகையாக காண்பிக்கப்பட்டிருந்ததால் ரூபா 50,300 தொகை கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவையிலிருந்த முத்திரைக் கட்டணங்களின் சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு அறிக்கைக்கு ஏற்ப அடையாளம் காணப்பட்டுள்ள ஆவணப்படுத்தப்படாத அலுவலக உபகரண சொத்துக்களான 242 உருப்படிகளின் பெறுமதியைக் | சபைக்கு உரிய அனைத்து சொத்துக்களினதும் பெறுமதியை இனங்கண்டு கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்காக காரியாலயங்களில் உள்ள உபகரணங்கள், வாகனங்கள், கட்டிடங்கள் மற்றும் காணிகளின் மீதியை மதிப்பிடும் போது பொருட்களின் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | மெய்மயாய்வு அறிக்கையைப் பயன்படுத்தி கணக்கிட்டுள்ளதாக அறியத் தருகிறேன். |
| (iii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 12,986,022 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் நிதிக்கூற்றுகளில் ரூபா 11,653,653 தொகை குறிப்பிடப்பட்டிருந்ததால் ரூபா 1,332,369 பெறுமதியான தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | காணி மற்றும் கட்டிடங்களின் சரியான பெறுமதியை இனங்கண்டு கணக்கிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பொது பேரேட்டில் 10 கணக்கு மீதிகளில் ரூபா 9,340,809 பெறுமதியான மீதி காசோலையில் ரூபா 10,581,613 பெறுமதியான தொகையாக காண்பிக்கப்பட்டு இருந்தமையால் ரூபா 1,701,042 தொகை மொத்த வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளில் வேறுபாடுகளை ஒப்பிட்டு கணக்கை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மீதி காசோலையில் கணக்குகள் 05 இற்கான மொத்தப் பெறுமதி ரூபா 176,136,118 ஆகவும், நிதிக்கூற்றுகளில் ரூபா 176,217,615 ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்ததால், ரூபா 1,606,481 பெறுமதியான தொகை மொத்த வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளில் வேறுபாடுகளை ஒப்பிட்டு கணக்கை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (iii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுகளுக்கு ஏற்ப கணக்கு மீதிகள் 06 இன் மொத்தப் பெறுமதியான ரூபா 274,591,526 தொகை கணக்குக் குறிப்புகள் மற்றும் உப ஆவணங்களுக்கு | உரிய மீதிகளில் வேறுபாடுகளை ஒப்பிட்டு கணக்கை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

இணங்க ரூபா 272,668,294 ஆக இருந்ததால் ரூபா 3,459,446 பெறுமதியான தொகை மொத்த வேறுபாடு காணப்பட்டது.

**(இ) தொங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பல ஆண்டுகளாக கணக்குகளிடையே பரிமாற்றமாகக் காணப்படும் ரூபா 115,378 பெறுமதியான தேறாத கணக்கு மீதிகள் தொடர்பாக தேடிப் பார்த்து தேவையான இணக்கங்களைச் செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் இலங்கை வங்கியின் நடமாடும் கணக்கொன்றின் மிகை வரைவு மீதியாக மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அதைக் குறித்து தேடிப் பார்த்து கணக்குகளில் தேவையான இணக்கங்களைச் செய்து தேறாத கணக்குகள் தீர்க்கப்பட வேண்டும். | பல ஆண்டுகளாக முன் கொண்டு வரப்படும் ரூபா 115,378 பெறுமதியாக தேறாத மீதிகள் 2020 ஜுலை மாதம் மா நகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டு அவற்றின் முன்மொழியப்பட்ட நிலைப்பாட்டோடு இந்த மீதிப் பெறுமதியைத் தீர்க்க நடவடிக்கை எடுத்துள்ளதை அறியத் தருகிறேன். |

**(ஈ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(i) கிடைக்க வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பல ஆண்டுகளாக நிதிக்கூற்றுகளில் காணப்படும் கிடைக்க வேண்டிய 04 கணக்குகளுக்குரிய ரூபா 3,655,064 பெறுமதியான தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய மீதிகளைத் தீர்வு செய்ய வேண்டும் | பல ஆண்டுகளாக காணப்படுவதால் மா நகர சபைக்கு சமர்ப்பித்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

**(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பல ஆண்டுகளாக நிதிக்கூற்றுகளில் காணப்படும் செலுத்த வேண்டிய 09 | செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்வு செய்ய நடவடிக்கை எடுத்தல் | பல ஆண்டுகளாக காணப்படுவதால் மா நகர சபைக்கு சமர்ப்பித்து |

| | | |
|---|---|---|
| கணக்குகளுக்குரிய ரூபா 1,534,393 பெறுமதியான தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும் | தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக அறியத் தருகிறேன |

**(உ) கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 68,842,896 பெறுமதியான 12 கணக்குகளுக்கு உரிய ஏற்றுக் கொள்ளத்தக்க அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை விதி 33 | வீத வரி செலுத்துவதைப் புறக்கணிப்பவர்கள் தொடர்பான பெயர் பட்டியல் மற்றும் சொத்துக்களைத் தடுப்பதற்கான பிடியாணை பட்டியல் தயாரிக்கப்படவில்லை. | விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும் | வீத வரியைச் செலுத்துதல் தொடர்பாக சிவப்பு அறிக்கை வழங்கப்படல் மற்றும் சொத்துகளுக்கு தடை விதிக்கும் பிடியாணையை 2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இருந்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 1645 | சபையின் வாகனங்களுக்கு உரிய ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சாராம்சம் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத தோடு குறிப்புப் புத்தகங்கள் மற்றும் ஓட்டக் குறிப்புகள் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | வருங்காலத்தில் உரிய தினத்துக்கு முன்பே முறையான விதத்தில் கணக்காய்விடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முறையாகப் பேணப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | பொது நிர்வாக சுற்றறிக்கை<br>----------------- | | | |
| (i) | 2016 திசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்குரிய 06 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் சோதனைகள் மேற் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உரிய சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும் | சபைக்குரிய வாகனங்களின் எரிபொருள் சோதனையை 2020.07.10 ஆம் திகதியிலிருந்து பரிசோதிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதை அறியத் தருகிறேன். |
| (ii) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2009 ஜூன் 07 ஆம் திகதிய 09/2009 (i) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | 2019 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் வரை கைவிரல் அடையாள இயந்திரம் மூலமாக வருகை மற்றும் வெளியேறல் என்பன உறுதி செய்யப்பட்டிருக்கவில் லை. | உரிய சுற்றறிக்கையி ன் பிரகாரம் கை விரல் அடையாள இயந்திரத்தா ல் வருகை மற்றும் வெளியேறை ல உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இருந்து முறையான விதத்தில் வருகை மற்றும் வெளியேறலைப் பதிந்திருக்காத ஒருவரை பணி நிறுத்தம் செய்துள்ளதோடு ஏனைய இரண்டு ஊழியர்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தி தக்க நடவடிக்கைகளை எடுக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | 2006 நவம்பர் 14 ஆம் திகதியிட்ட இலக்கம் PL/07/01/53 உடைய உள்ளுராட்சி திருத்தப்பட்ட சுற்றறிக்கை<br>---------------------- | | | |
| (i) | இல 09 | கல்லறை ஆவணங்களைப் பேணுதல், பிரசுரித்தல் மற்றும் மதில் வேலிகளை அமைத்து பாதுகாத்தல் போன்றவற்றைச் | உரிய சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும் | தற்போது சபைக்குரிய கல்லறையை கையேற்க கொள்ள செய்ய வேண்டிய ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளதை அறியத் தருகிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ii) | இல 06 2.2(iii) | தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டு வரும் பாதை பராமரிப்பு முறை பின்பற்றப்படாததோடு சபைக்குரிய பாதைகளை வர்த்தமானி அறிவித்தல் செய்திருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும் | 2021 ஆம் ஆண்டில் இருந்து தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |
| (உ) | வட மத்திய மாகாண உள்ளுராட்சித் திணைக்கள ஆணையாளரின் 2002 ஜுலை 24 ஆம் திகதியில் உள்ளவாறு உள்ளுராட்சி சுற்றறிக்கை இலக்கம் 20/2002 | வீதி ரேகை சான்றிதழை வழங்குவதற்காக அறவிடப்படும் பரிசோதனைக் கட்டணத்தில் 50மூ களப் பரிசோதனை உத்தியோகத்தரிகளுக்கு வழங்கப்பட வேண்டும் எனினும் 2016 ஆம் ஆண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு அறவிடப்பட்டிருந்த ரூபா 94,400 பெறுமதியான பரிசோதனைக் கட்டணம் முழுமையாக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது | உரிய சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும் | 2016 ஆம் ஆண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டு வரையான மொத்த பணத் தொகையும் உத்ரியோகத்தர்களுக்கு இடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதால் அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள ரூபா 94,400 பெறுமதியான தொகையை உரிய உத்தியோகத்தரிகளிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

2.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவீனம் ரூபா 5,061,424 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவீனம் ரூபா 1,637,638 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,150,000 | 1,723,500 | 1,576,307 | 1,090,836 | 1,546,000 | 1,394,480 | 1,093,965 | 943,643 |
| (ii) | வாடகை | 5,662,000 | 8,408,465 | 7,279,341 | 3,286,650 | 7,092,700 | 5,101,135 | 4,801,135 | 2,157,526 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 1,262,750 | 1,652,445 | 1,632,445 | 20,000 | 536,550 | 826,475 | 826,475 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 4,841,850 | 4,001,000 | 3,367,341 | 3,775,738 | 5,139,100 | 3,560,232 | 1,951,429 | 3,142,079 |
| | மொத்தம் | 13,916,600 | 15,785,410 | 13,855,434 | 8,173,224 | 14,314,350 | 10,882,322 | 8,673,004 | 6,243,248 |

2.2.2 **வீத வரி மற்றும் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்படும் ரூபா 1,090,836 பெறுமதியான வீதவரி தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | எஞ்சியிருந்த வீதவரி வரியை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வீதவரியைச் செலுத்தாத சொத்து உடைமையாளர்களிடம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் இலக்கம் 158 ஆம் பிரிவின் பிரகாரம் சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதோடு, இந்த ஆண்டின் எஞ்சிய காலாண்டுகளில் அதை முறையாக செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் தலைமை செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2019 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,289,438 மற்றும் முத்திரைக்கட்டணம் ரூபா 2,486,300 ஆகும். | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம், முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | தற்போது உண்மை மீதியான ரூபா 1,496,254 பெறுமதியான தொகையை விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை அறியத் தருகிறேன். |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதான விடயங்கள் 28 ஐ நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும் எனினும் உரிய விடயங்கள் தொடர்பாக துணை விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் பிரகாரம் துணை விதிகளை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருங்காலத்தில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக நிகழ்ச்சி நிரல் - 2030 | ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030 பிரகாரம் | 2020 ஆம் ஆண்டில் இருந்து நிலைபேறான அபிவிருத்தி இலக்கை வெற்றிகரமாக்குவதற்கு உரிய திட்டங்களைத் தயாரிக்க |

| | | |
|---|---|---|
| தொடர்பாக சபை அறிந்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | அபிவிருத்தி விடயப் பொறுப்பதிகாரிக்கு அறியத் தரப்பட்டுள்ளது. |

**(இ) கைவிடப்பட்ட பணிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பணிகள் 04 ஐ ஆரம்பித்து அதற்காக ரூபா 592,185 தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் எதிர்பார்த்த பெறுபேறைப் பெற்றுக் கொள்ளாமல் கைவிடப்பட்டிருந்தது. | ஒப்பந்தப் பிரகாரம் பணிகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். உரிய தினத்தில் பணிகளைப் பூர்த்தி செய்யாததால் ஒப்பந்ததாரரின் வேண்டுகோளின் பிரகாரம் நீடிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஈ) பணிகளைப் பூர்த்தி செய்வதில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஆகஸ்ட் மாதத்தில் இருந்து செப்டம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்த செயற்திட்டங்கள் 09 இற்கான மதிப்பிடப்பட்ட செலவுகள் ரூபா 3,647,842 பெறுமதியான தொகையில் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு முன்னேற்றமானது 50% இலிருந்து 75% ஆகக் காணப்பட்டது. | ஒப்பந்தப் பிரகாரம் பணிகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். உரிய தினத்தில் பணிகளைப் பூர்த்தி செய்யாததால் ஒப்பந்ததாரரின் வேண்டுகோளின் பிரகாரம் நீடிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 6,390,000 பெறுமதியான வாகனம் விபத்துக்குள்ளானதால் ஏற்பட்டிருந்த ரூபா 1.593.250 தொகை பெறுமதியான நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நஷ்டம் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 சொத்துக்களை ஆவணப்படுத்தாதிருத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிர்வகிக்கப்படும் 44 மயானங்கள் நிலையான சொத்துக்கள் ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குரிய அனைத்து சொத்துகளையும் ஆவணப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆம் ஆண்டுக்காக புதிய கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தகவல்களை உள்ளடக்கியுள்ளதாக அறியத் தருகிறேன். |

### 3.3.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 காணிகள் மற்றும் 45 மயானங்கள் அளவிட்டு அவற்றின் உரித்தை சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் பயன்படுத்தப்படும் அனைத்து சொத்துக்களினதும் உரிமையைக் கையகப்படுத்தி மதிப்பிட்டு கணக்கிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபைக்குரிய இடங்கள் மற்றும் மயானங்களை கையேற்க வருங்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |
| (ஆ) | சபையினால் உபயோகப்படுத்தப்படும் ரூபா 68,709,729 பெறுமதியான 09 வாகனங்களின் உரிமையைக் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் உபயோகப்படுத்தப்படும் அனைத்து சொத்துக்களினதும் உரிமையை கையேற்க மதிப்பிட்டு கணக்கிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த வாகனங்கள் அனைத்தையும் இந்த ஆண்டுக்குள் சபைக்கு பொறுப்பேற்கத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

### 3.3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 6,866,402 பெறுமதியான சொத்துக்கள் தொகுதி 04 ஐ உபயோகப்படுத்தாத காரணத்தால் பல ஆண்டுகளாக செயலற்றுக் காணப்பட்டன. | அனைத்து சொத்துக்களையும் கூடிய செயலாற்றலுடன் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வின் போது கணிப்பீட்டுக் குழுவிடம் சமர்ப்பிக்கத் தேவையான செயன்முறைகளைச் செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

### 3.3.4 வாகனப் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வாகனங்கள் / இயந்திரங்களை வாடகை அடிப்படையில் வழங்குவதன் மூலம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 2,159,775 பெறுமதியான வாடகை நிலுவை அறவிடப்பட வேண்டியவர்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | உரிய தரப்பினரை இனங்கண்டு நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |
| (ஆ) | கல்ரோலரின் 370 மீற்றர் மணித்தியாத்திற்கு உரிய ஓட்டக் குறிப்புகள் காணாமல் போயிருந்தன. | ஓட்டக் குறிப்புகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களால் புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். | 2018.07.13 ஆம் திகதியில் இருந்து 2019.07.22 ஆம் திகதி வரை குறிப்புகள் எழுதப்பட்ட ஓட்டக் குறிப்புகள் மற்றும் 2019.07.23 ஆம் திகதியில் இருந்து 2020.02.13 ஆம் திகதி வரை குறிப்புகள் எழுதப்பட்ட ஓட்டக் குறிப்புகள் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளரிடம் விசேட விசாரணை நடவடிக்கையொன்றுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறேன். |
| (இ) | மோட்டார் க்ரேடரை வாடகைக்கு வழங்கியதன் மூலம் 2019 ஜுலை 31 ஆம் திகதியில் உள்ளவாறு | நிலுவை வருமானம் தொடர்பான விபரங்களை கணக்காய்வுக்கு | இலக்கம் WPZA 5303 உடைய மோட்டார் கிரேடர் இயந்திரத்தின் 2019 ஆம் |

| | | |
|---|---|---|
| அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 453,175 ஆகக் காணப்பட்டதோடு 2019 ஆகஸ்டிலிருந்து திசெம்பர் வரையும் வாடகைக்கு வழங்கியது மற்றும் அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானம் தொடர்பான விபரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சமர்ப்பிக்க வேண்டும். | ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் இருந்து திசெம்பர் வரையான நிலுவை வருமானம் தொடர்பான விபரங்கள் அடங்கிய அறிக்கையை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கிறேன். |

## 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 6,390,000 தொகை பெறுமதியான கெப் வாகனமொன்று 2019 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி விபத்துக்குள்ளானதில் ரூபா 1,583,250 பெறுமதியான நஷ்டம் ஏற்பட்டிருந்தது. இந்த விபத்து தொடர்பாக தகவல் பிழைகள் மற்றும் துஷ்பிரயோகங்களை அடிப்படையாகக் கொண்டு காப்புறுதி ஈட்டுத் தொகை மறுக்கப்பட்டிருந்ததோடு வாகனம் உள்ளூர் முகவரின் பிரதேச பழுது பார்த்தல் மத்திய நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 103, 104 மற்றும் 105 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்தோடு உரிய நஷ்டத்தை அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது இந்த வாகன விபத்து தொடர்பான முழுப் பொறுப்பையும் அந்தச் சந்தர்ப்பத்தில் சாரதியாகக் கடமையாற்றியவரின் கவனயீனமான வாகனம் செலுத்துதலினால் நிகழ்ந்ததாக கண்டறிந்துள்ளதோடு அந்த ரூபா 1,583,250 பெறுமதியான நஷ்டத் தொகையை சாரதியிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறியத் தரப்பட்டுள்ளது. |

## 3.5 புலப்படக்கூடிய மோசடிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு உரிய வாகனங்களை வாடகை அடிப்படையில் வழங்கும்போது பணத்தை அறவிடுவதற்காக தொழில்நுட்ப அதிகாரிக்கு வழங்கப்பட்டிருந்த ரசீதுப் புத்தகங்கள் 04 இல் அறவிடப்பட்டிருந்த பணத் தொகை சபை நிதிக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ரசீதுப் புத்தகங்கள் மூலமாக அறவிடப்படும் பணம் முழுவதையும் சபை நிதிக்கு செலுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். தற்போது உபயோகப்படுத்தப்படும் ரசீதுப் புத்தகங்கள் அனைத்தும் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ளதை அறியத் தருகிறேன். |

04. **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

4.1 **உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதிய 04/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் உடனடியாக பொறுப்பு கூற வேண்டிய உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து அறிக்கையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் பணி பொறுப்பளிக்கும் ஆவணத்தை சோதனையிட்ட வேளையில் உள்ளகக் கணக்காய்வு விசாரணை உத்தியோகத்தர் ஒருவரை நியமித்திருப்பது புலப்பட்ட போதிலும், அந்த அதிகாரியினால் உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை அல்லது கணக்காய்வுத் திட்டமொன்றைத் தயாரித்தல் நடைபெற்றிருக்கவில்லை. |

**4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் செயற்படுத்தல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2016 ஜனவரி 28 ஆம் திகதிய DMA/2009(1)(i) இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப் பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் எஞ்சிய காலண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |